**இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள்**

**ஆணையிடுபவர்:திரு.ந.சுரேஷ்., பி.இ.,**

**ந.க.அ2/7015/2024** **நாள்: 18.02.2025**

**மாசி மாதம் 06-ஆம் நாள்**

**திருவள்ளுவர் ஆண்டு 2056**

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகு - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - II (Non Interview Posts) (Group 2A Services) - நேரடி நியமன உதவியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தவர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண். 3219/PSD-A2/2024. நாள்: 01.07.2024,
2. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.அ2/7015/2024, நாள்.18.07.2024
3. தொடர்புடைய ஆவணங்கள்.

***

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - II (Non Interview Posts) (Group 2A Services)-ன் மூலம் முதுநிலை வருவாய் ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டு இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தனியர்களுக்கு பார்வை 2-இல் உள்ள செயல்முறை ஆணையின்படி, இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பிட்டுள்ள தேதி முதல் பணியாற்றி வருகிறார்கள்.

2) எனவே, கீழே குறிப்பிடப்பிட்டுள்ள முதுநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் தனியர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் பணிவரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண்

பருவம் 3 (மூன்று) ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

| வ.எ | முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 01. | ஆர்.கோபிசெல்வம், தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அலுவலகம், அரக்கோணம். | 30.07.2024 முற்பகல் |
| 02. | எஸ்.கார்த்திக், உதவி இயக்குநர் (கனிமம்) அலுவலகம், இராணிப்பேட்டை. | 26.07.2024 முற்பகல் |
| 03 | அ.அம்ரின், "ஐ" பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராணிப்பேட்டை. | 10.01.2025 முற்பகல் |

3) இந்த பணிவரன்முறையானது உயர்நீதிமன்ற மதுரை கிளை W.A.(MD) No.181/2023, C.M.P(MD) No.2247/2023 மற்றும் சென்னை/மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நியமனம் செய்யப்பட்ட பணியிடங்களுக்கான இப்போட்டி தேர்வு முறைகள் தொடர்பான வழக்குகளின் தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது.

4) இந்த ஆணை குறித்து சம்மந்தப்பட்ட நபர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது.

ஒம்/-ந.சுரேஷ்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
இராணிப்பேட்டை.

/உத்தரவுப்படி/

18/2/2025

அலுவலக மேலாளர்(பொது).

பெறுநர்

சம்மந்தப்பட்ட நபர்கள்.

நகல் : உதவி இயக்குநர் (கனிமம்), இராணிப்பேட்டை.

18/2/25

நகல் : தனிவட்டாட்சியர் (ச.பா.தி), அரக்கோணம்.

நகல்: கணக்கு பிரிவு

நகல் : அ2- இருக்கைக்கு.